**தங்காலை பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூலை 10 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 09 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 16 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தங்காலை பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 யூன் 06 ஆந் திகதி உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சிலிருந்து நன்கொடையாகக் கிடைத்த ரூபா 1,463,200 பெறுமதியான WPRD 4480 ஆம் இலக்க உழவு இயந்திரம் மற்றும் WPRD 8994 ஆம் இலக்க டேலர் என்பன மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 141,340 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஒக்தோபர் 25 ஆந் திகதி சபை கைப்பற்றிய ரூபா 675,000 தொகையான கொலொன்ன கந்த காணி 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மூலதனமாக்கப்பட்டிராததுடன் காணி மற்றும் கட்டிடப் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 170,000 கூட்டுத்தொகையான 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மூலதனச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற உள்ளூராட்சி ஓய்வூதியப் பங்களிப்புப் பணமாகச் செலுத்த வேண்டிய ரூபா 537,306 தொகை மீளாய்வாண்டின் கணக்குகளுக்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஹும்மான நரம்பன்னனின் 87789 ஆம் இலக்க அடியிதழில் முன்னைய ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 97,860 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 2013 நவம்பர் 28, 29 மற்றும் 30 ஆந் திகதிகளில் மோட்டார் கிரேடர் இயந்திரத்தைப் பயன்படுத்தியமையால் 003563 ஆம் இலக்க ரூபா 51,800 தொகையான காசோலையொன்று சபைக்குக் கிடைத்திருந்ததுடன் அது திசெம்பர் மாதத்தில் மதிப்பிழந்திருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வாகன வாடகைப் பதிவேட்டில் அது ரூபா 51,800 உள்ளடக்கப்படாதிருந்ததுடன் கணக்குகளிலும் அது உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஆம்பமீதி பேரேட்டில் சீராக்குவதற்கு வைக்கப்பட்ட நாட்குறிப்புப் பதிவு 01 இல் சம்பள மீளளிப்புக் கணக்கில் ஆரம்ப மீதி ரூபா 771,500 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பேரேட்டில் அது ரூபா 71,500 ஆகப் பதியப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 77,483 கூட்டுத்தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஒ) பேரேட்டில் 601 செலவினத் தலைப்பிலிருந்து வருமானச் செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட்ட பெறுமதி ரூபா 5,122,072 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் வருமானச் செலவினக் கணக்கில் அது ரூபா 5,548,304 ஆக வைக்கப்பட்டமையால் ரூபா 426,232 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஓ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 700,650 கூட்டுதொகையான செலவினம் ஆண்டின் செலவனித்திலும் கடன்கொடுத்தோர் ஒதுக்கங்களிலும் கைவிடப்பட்டிருந்தது.

(ஔ) மாகாண சபை முத்திரைக் கட்டணப் பட்டோலை தயாரிப்பதற்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்காக காணிப் பதிவாளர் நாயகம் அலுவலகத்திற்கு ரூபா 52,525 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும் அது ஐந்தொகையின் கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணம், ஆண்டின் முத்திரைக் கட்டணம், ஆண்டின் இறுதியில் கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணங்களின் பெறுமதிகளில் நிதிக்கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்ட மீதி மற்றும் பட்டோலை, பதிவேடுகளின் மீதிகளுக்கிடையே ரூபா 32,481,511 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 123,029,947 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பதிவேடு, பட்டோலை மற்றும் மெய்மையாய்வு அறிக்கை தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 334,912 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,383,777 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 4,395 | 4,346 | 163 |
| ii. | வாடகை | 8,105 | 4,998 | 1,337 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 881 | 971 | 50 |
| iv. | ஏனைய வருமானம் | 21,179 | 21,768 | 7,835 |

### 2.2.2 வாடகை

(அ) கடைகளை வாடகைக்கு விடல்

யாயவத்த, றத்ன மற்றும் நெடொல்பிட்டிய (தேனகம உள்ளடங்கலாக) கடைகளை வாடகைக்கு வழங்கியதற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முறையே ரூபா 167,593, ரூபா 238,976 மற்றும் ரூபா 106,760 தொகைகள் நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) றத்ன வாராந்த சந்தை வாடகை வருமானம்

றத்ன வாராந்த சந்தையின் உரித்து 2012 ஆம் ஆண்டிற்காக ரூபா 1,928,000 தொகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. வாடகை உடன்படிக்கையின் 01 ஆம் இலக்க நிபந்தனையின் படி வாடகை உரித்தைக் கையளிப்பதற்கு முன்னர் வாடகைப் பணத்திலிருந்து 25 சதவீதம் அதாவது ரூபா 482,000 தொகை பாதுகாப்பு வைப்பாக சபையில் வைப்புச் செய்ய வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் வாடகையாளரினால் 05 சந்தர்ப்பங்களின் போது ரூபா 150,000 கூட்டுத்தொகை மாத்திரம் பாதுகாப்பு வைப்பாக வைப்புச் செய்யப்பட்டிருக்கும் போது உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு முரணாக வராந்த சந்தை உரித்து அவருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

ii. வாடகையாளரினால் வாடகைப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாதிருந்ததுடன் அவர் 2013 ஏப்ரல் 12 ஆந் திகதி மரணமடைந்திருந்தார். ரூபா 255,351 தொகையொன்று 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிலுவையாக இருந்தது.

iii. உடன்படிக்கையின் படி பிணையாளர்களிடமிருந்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அதில் ஒருவர் 2013 ஆம் ஆண்டிற்காக றத்ன வாராந்த சந்தையை வாடகைக்குப் பெற்ற வாடகையாளர் என அவதானிக்கப்பட்டது. இவ்வாறான நிலைமையொன்று காணப்பட்ட போதிலும் சபைத் தீர்மானத்தின் மூலம் மேற்கூறப்பட்ட நிலுவைப் பணத்தை

பதிவழிப்பதற்காக தீர்மானம் எடுத்து அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கடிதமும் அனுப்பப்பட்டிருந்தது.

2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் நிலுவைப் பணத்திலிருந்து 75 சதவீதம் அறவிடப்பட்டதாக தலைவரினால் 2014 நவம்பர் 25 ஆந் திகதி எனக்கு அறவிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானமான ரூபா 50,010 தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(4) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 ஏக்கர் வரி**

மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஏக்கர் வரி வருமானமான ரூபா 101,628 தொகையை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையில் பதிவுசெய்துள்ள ஹோட்டல் மற்றும் வாடிவீடுகளிலிருந்து அறவிடவேண்டிய கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் படி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் தங்குமிடங்களிலிருந்து கட்டணம் அறவிடப்பட்ட ஆண்டிற்கு முன்னரான ஆண்டின் வருமானத்தில் 1 சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்று அறவிடமுடியும் எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கீழே காண்பிக்கப்படுகின்ற ஹோட்டல்களுக்குரிய கட்டணத்தைக் கணப்பீடு செய்யும் போது உரிய ஆண்டினதும் முன்னைய ஆண்டினதும் இரண்டு நிதிக்கூற்றுக்களையும் பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் பின்வரும் கணிப்பீட்டுக் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

(அ) பே ஹோட்டல்

i. மேற்கூறப்பட்ட நிறுவனத்தின் மூலம் 2011 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்களின் இரண்டு தொகுதிகள் சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்களின் புரள்வில் வேறுபாடு காணப்பட்டது.

ii. மேற்கூறப்பட்ட பிரகாரம் சபைக்கு ஒரே காலப்பகுதிக்காக அனுப்பப்பட்ட இரண்டு கணக்குத் தொகுதிகளையும் அடிப்படையாகக் கொண்டு சபையினால் 2012 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக 1 சதவீதக் கட்டணம் பிழையாக கணிப்பிடப்பட்டமையினால் ரூபா 392,798 தொகையான வருமானமொன்றை சபை இழந்திருந்தது.

(ஆ) பக்கின்ஹேம் லேசர் லங்கா தனியார் கம்பனி

2012 ஆம் ஆண்டிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது, 2011 மற்றும் 2012 என்ற இரண்டு வருடங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களை பயன்படுத்தி 2011 ஆம் ஆண்டிற்குரிய மொத்த புரள்வின் அடிப்படையில் 1 சதவீதக் கட்டணம் கணிப்பிடப்பட்டிருந்ததுடன் சபையினால் முன்னைய ஆண்டிற்குரிய வருமானத்தைக் கணிப்பீடு செய்யும் போது 2011 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி 09 மாத காலத்திற்காகவும், 2012 மார்ச் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் படி 03 மாத காலத்திற்காகவும் புரள்வு கணிப்பிடப்பட்டமையினால் ரூபா 158,737 தொகையான வருமானமொன்றை சபை இழந்திருந்தது.

### 2.2.6 விளம்பரப் பதாதைகளுக்கான கட்டணம் அறவிடல்

i. சபையில் பேணப்படுகின்ற கோவைகளின் படியும் 2013 திசெம்பர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் படியும் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின்படியும் பாரியளவிலான 07 அறிவித்தல் பதாதைகளுக்காக 2013 ஆம் ஆண்டிற்காகக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ii. அறிவித்தல் பதாதைகள் தயாரிக்கப்பட்டு 09 மாதகாலம் கடந்திருந்த போதிலும் அந்த அறிவித்தல் பதாதைகள் வருமான உழைப்பு மார்க்கமாக பயன்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

iii. 2013 திசெம்பர் மாதம் நடைபெற்ற சபைக்கூட்ட அறிக்கையின் 5.7 ஆம் பந்தியின் படி 05 அறிவித்தல் பதாதைகள் மாத்திரம் நிர்மாணிப்பதற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 08 அறிவித்தல் பதாதைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.7 வருமான ஈட்டவழியாக பாரிய அளவில் 08 அறிவித்தல் பதாதைகள் சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்துவதற்காகத் தயாரித்தல்

மேற்கூறப்பட்ட செயற்பாட்டிற்காக 2013 மார்ச் 18 ஆந் திகதிய 65 ஆம் இலக்க உறுதிச்சீட்டிலிருந்து தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 459,270 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அறிவித்தல் பதாதைகள் பொருத்தப்பட்ட இடங்கள் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அதில் 02 சபை வளவில் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது காணப்பட்டமை 2013 திசெம்பர் 06 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனயின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.2.8 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் ரூபா 7,296,064 கூட்டுத்தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் அறவிடவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் கூறிடல் விண்ணப்பங்கள் உரிய தரப்பினருக்கு வழங்காமை

அங்கீகரிக்கப்பட்ட 64 நிர்மாணங்கள் மற்றும் கூறிடல் விண்ணப்பங்கள் உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்படாமல் ஒரு மாதம் முதல் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக சபையில் நிறுத்தி வைக்கப்பட்டமையால் பொது மக்கள் வசதியீனங்களுக்கு உள்ளாகும் வகையில் செயற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் உரிய தரப்பினர்களுக்கு வழங்காமைக்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலாவதியான காசோலைகள் ஓய்வு பெறச் செய்யாமை

வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமாப்பிக்கப்படாத ரூபா 163,402 கூட்டுத்தொகையான 12 காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புக்கள் அங்கீகரித்துக் கொள்ளப்படாமை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1) (1) ஆம் பிரிவின் படி சபையினால் 12 பதவிகளுக்காக வழங்கப்பட்ட நியமனங்களுக்காக உள்ளூராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மனித வள முகாமைத்துவம்

i. 2013 நவம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான பட்டோலையின்படி சபையில் 08 பதவிகளில் 13 வெற்றிடங்களும் 13 பதவிகளில் 23 மிகையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

ii. அந்த தகவல்களின்படி சபையில் அங்கீகரிக்கப்படாத 07 பதவிகள் நிரந்தர பதவியணியில் இருவரும், அமைய, நாட்கூலி, தற்காலிக அடிப்படையில் ஐயவரும் சேவையாற்றுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

சபையினால் 2013 நவம்பர் 08 ஆந் திகதிய 1027 ஆம் இலக்க உறுதிச்சீட்டுடில் 03 கூடாரங்களைத் தயாரிப்பதற்காக ரூபா 690,000 தொகை சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச்சட்டத்தின் 132 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபையினால் சபை நிதியத்தைப் பயன்படுத்தக்கூடிய சட்டரீதியான ஏற்பாடுகள் இன்றிய விடயங்களுக்காக அமைச்சரின் எழுத்து மூல முன் அங்கீகாரமும் செலவினங்களைச் செய்வதற்காக சபையின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3.3 விளைவற்ற சொத்துக்கள்

252-6502 ஆம் இலக்க கெப்வண்டி, கொங்கிரீட் கலவை இயந்திரம் என்பன 2011 ஆம் ஆண்டிலிருந்தும், இரண்டு துவிச்சக்கர வண்டிகள் 2010 ஆம் ஆண்டிலிருந்தும், மண் செப்பனிடும் இயந்திரமொன்று 2012 ஆம் ஆண்டிலிருந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது சபையில் காணப்பட்டதுடன் அந்த சொத்துக்கள் 2003 சனவரி 03 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின்படி கைதவிர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது 09 செலவின விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டை விஞ்சி ரூபா 1,226,169 கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக குறைநிரப்பு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருக்வில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஊழியர் கடன் நிர்வாகம்